# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,610 — 1958 දෙසැම්බර් 6 වැනි සෙනසුරාදා — 6.12.1958

11,610 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 6 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் கீழ்க் காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1958 ம் ஸ்ரீ நவம்பர் மீ 30 ந் உ.

டீ. பீ. ஆர். குணவர்த்தன,
விவசாய உணவு அமைச்சர்.

அட்டவணை

| கட்டளை இட்ட திகதி | யாரால் கட்டளை இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர் மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரம் செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 28.10.58 | இலங்கை முழுவதற்கும் பிரதி விலைக் கட்டுப் பாட்டதிகாரி (உணவு) | உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்) | 28.10.58 ம் திகதியைக் கொண்ட 11,571 ம் இல. |
| 28.10.58 | இலங்கை முழுவதற்கும் பிரதி விலைக் கட்டுப் பாட்டதிகாரி (உணவு) | உப உணவுப் பொருட்கள் | 29.10.58 ம் திகதியைக் கொண்ட 11,572 ம் இல. |

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : எவ். சீ/வீ. எஸ். எவ். 6 (2) — மீன்கருவாடும் இறால் கருவாடும்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினலும் 3 (2) ம் பிரிவினலும் கொழும்பு பிரிவு உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, சில்வெஸ்டர் ஜஸ்டின் விஜயசேகர ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 3 ந் திகதியைக் கொண்ட 11,409 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 2 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட எவ். சீ./வீ. எஸ். எவ். 6 (1) ம் இலக்கமுள்ள விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(ii) இதனோடிருக்கும் அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளையே அதே பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே நிகர அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விற்பனை விலைகளாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணை " அ "வில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு கூடுதலாக விற்றலாகாது ;

(iii) இதனோடிருக்கும் அட்டவணை " ஆ "வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளே அதே பத்திகளில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே நிகர இறுத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடுதலான விலைகளாகும். குறித்த அட்டவணையிலுள்ள பொருட்களை அதே அட்டவணை " ஆ " வில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்த விலைகளுக்கு கூடுதலாக விற்றலாகாது.

(iv) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன்கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு வழக்கமாக மொத்தமாக விற்பவர் எவரும் " மொத்த வியாபாரி " எனக் கருதப்படும் ;

(ஈ) மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை அட்டவணை " அ " வின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் மொத்த வியாபாரத்துக்கென விதிக்கப்பட்ட விலைகளாகும் ;

(உ) " ஆகக்கூடிய சில்லறை விலை " என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும்.

(ஊ) " காய்ந்த மீன் " என்பது " மீன்கருவாட்டையே " குறிக்கும்.

(v) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் எவராவது அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 18 வரையும், அட்டவணை " ஆ "வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட மீன்கருவாடு அல்லது இறால் கருவாடுடன் வேறு பொருட்களை கலந்து விற்றலாகாது.

(vi) அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளிலும் அட்டவணை " ஆ "வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டுள்ள மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருட்களுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் ;

(vii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறுத்தல் " அல்லது " இறு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமான இறுத்தல் நிறையாகக் கருதப்படும் ;

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் அட்டவணை " அ "வில் 2 தொடக்கம் 18 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மீன்கருவாடு அல்லது இறால்கருவாடு மொத்த விற்பனை செய்யும் ஒவ்வொருவரும், அட்டவணை " ஆ " வில் 2 தொடக்கம் 13 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மீன்கருவாடு அல்லது இறால் கருவாடு சில்லறையாக விற்பவர் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் விபரம் ;

(இ) விற்கப்பட்ட பொருளின் நிகர நிறை ;

(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(உ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(ix) அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 18 வரையும் உள்ள பத்திகளில் விபரிக்கப்பட்ட மீன்கருவாடு அல்லது இறால் கருவாடு விற்கும் பொழுது அட்டவணை " ஆ " வில் 2 தொடக்கம் 13 வரையும் உள்ள பத்திகளில் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளில் விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறனே ;

(x) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணை " அ " வில் 2 தொடக்கம் 18 வரையுமுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, இறால் கருவாடு தவிர்த்த மற்றைய எந்த மீன்கருவாடோ கொள்கலத்தில் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக்குறைந்தது கழிவாக பத்து இறுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும்.

(xi) அட்டவணை " அ " வில் 14 ம் பத்தியில் குறிக்கப்பட்ட கும்பளா கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக இருபத்தைந்து இறுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும்.

(xii) அட்டவணை " அ " வில் 15 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள பொம்பிலி கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது எட்டு இறுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும் ;

(xiii) அட்டவணை " அ " வில் 16 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள நெத்தலி கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 20 றுத்தல் குறைத்துக் கணக்கிட வேண்டும்.

(xiv) அட்டவணை " அ " வில் 17 ம், 18 ம் பத்திகளில் குறிக்கப்பட்ட ஓடற்ற இறால்கருவாடு அல்லது ஓடுள்ள இறால் கருவாடு கொள்கலத்தில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக்குறைந்தது கழிவாக பதினைந்து இறுத்தல் குறைத்துக் கணக்கிடவேண்டும் ;

(xv) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இறால் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ந் திகதி முற்பகல் 9.45 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஜே. விஜயசேகரா,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்புப் பிரிவு.

## அட்டவணை " அ "

மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 | பத்தி 14 | பத்தி 15 | பத்தி 16 | பத்தி 17 | பத்தி 18 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எல்லைகள் | அறக்குளா தலையில்லாமல் | அரக்குளா தலையுடன் | கட்டா தலையில்லாமல் | முழுக் கட்டா | அஞ்சீலா தலையுடன் | அஞ்சீலா தலையில்லாமல் | பாரை தலையில்லாமல் | பாரை தலையுடன் | கொடுவா தலையில்லாமல் | கொடுவா தலையுடன் | சூரை | தொண்டன் | கும்பளா | பொம்பிலி | நெத்தலி | ஓடற்ற இறால் கருவாடு | ஓடுள்ள இறால் கருவாடு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. கொழும்பு முதலியார் பகுதி (மாநகர எல்லைகள் தவிர்ந்த கொழும்புப் பட்டணம்) | 116 97 | 98 66 | 86 45 | 66 11 | 60 11 | 64 18 | 96 62 | 78 32 | 86 45 | 62 87 | 86 45 | 66 11 | 27 97 | 78 32 | 74 59 | 117 47 | 92 56 |
| 2. அளுத்குறு கோறளை தெற்கு | 116 97 | 98 66 | 86 45 | 66 11 | 60 11 | 64 18 | 96 62 | 78 32 | 86 45 | 62 87 | 86 45 | 66 11 | 27 97 | 78 32 | 74 59 | 117 47 | 92 56 |
| 3. சல்பிற்றிக் கோறளை :— | | | | | | | | | | | | | | | | | |
| (அ) மொரட்டுவ, கெஸ்வவா மாம்பே பேருவாக்கள் | 117 5 | 98 73 | 86 52 | 66 16 | 60 16 | 64 24 | 96 70 | 78 37 | 86 52 | 62 91 | 86 52 | 66 16 | 27 99 | 78 37 | 74 66 | 117 56 | 92 62 |
| (ஆ) மற்றேகொட பேருவா | 117 16 | 98 82 | 86 60 | 66 22 | 60 22 | 64 30 | 90 78 | 78 45 | 86 60 | 62 97 | 86 60 | 66 22 | 28 02 | 78 45 | 74 75 | 117 67 | 92 71 |
| (இ) ககற்றுவோ | 117 28 | 98 92 | 86 69 | 66 29 | 60 29 | 64 37 | 96 88 | 78 53 | 86 69 | 63 04 | 86 69 | 66 29 | 28 05 | 78 53 | 74 84 | 117 79 | 92 81 |
| 4. சியான்னே கோறளை கிழக்கு | 117 62 | 99 21 | 86 93 | 66 48 | 60 48 | 64 57 | 97 16 | 78 75 | 86 93 | 63 22 | 86 93 | 66 48 | 28 13 | 78 75 | 75 11 | 118 13 | 93 07 |
| 5. ஹப்பிற்றிகம் கோறளை | 117 62 | 99 21 | 86 93 | 66 48 | 60 48 | 64 57 | 97 16 | 78 75 | 86 93 | 63 22 | 86 93 | 66 48 | 28 13 | 78 75 | 75 11 | 118 13 | 93 07 |
| 6. அளுத்குறு கோறளை வடக்கு | 117 62 | 99 21 | 86 93 | 66 48 | 60 48 | 64 57 | 97 16 | 78 75 | 86 93 | 63 22 | 86 93 | 66 48 | 28 13 | 78 75 | 75 11 | 118 13 | 93 07 |
| 7. சியான்னே கோறளை மேற்கு :— | | | | | | | | | | | | | | | | | |
| (அ) மகர, டனுகம, களனியா பேருவாக்கள் | 116 97 | 98 66 | 86 45 | 66 11 | 60 11 | 64 18 | 96 62 | 78 32 | 86 45 | 62 87 | 86 45 | 66 11 | 27 97 | 78 32 | 74 59 | 117 47 | 92 56 |
| (ஆ) பியகம, அளுத்கம பகனுவா பேருவாக்கள் | 116 97 | 98 66 | 86 45 | 66 11 | 60 11 | 64 18 | 96 62 | 78 32 | 86 45 | 62 87 | 86 45 | 66 11 | 27 97 | 78 32 | 74 59 | 117 47 | 92 56 |
| (இ) நரன்வெல, உருவெல, ஒயாபொட பெம்முல்ல, கல்கமுவா பேருவாக்கள் | 117 16 | 98 82 | 86 60 | 66 22 | 60 22 | 64 30 | 96 78 | 78 45 | 86 60 | 62 97 | 86 60 | 66 22 | 28 02 | 78 45 | 74 75 | 117 67 | 92 71 |
| 8. ஹேவாகம் கோறளை :— | | | | | | | | | | | | | | | | | |
| (அ) கொஸ்கம, வஹ, கலுவக்கல பேருவாக்கள் | 117 44 | 99 06 | 86 80 | 66 38 | 60 38 | 64 47 | 97 01 | 78 63 | 86 80 | 63 12 | 86 80 | 66 38 | 28 08 | 78 63 | 74 97 | 117 95 | 92 93 |
| (ஆ) பாதுக்கை பேருவா | 117 37 | 90 00 | 86 75 | 66 34 | 60 34 | 64 43 | 96 96 | 78 59 | 86 75 | 63 08 | 86 75 | 66 34 | 28 07 | 78 59 | 74 92 | 117 88 | 92 87 |
| (இ) ஹன்வெல பேருவா | 117 23 | 98 88 | 86 65 | 66 26 | 60 26 | 64 34 | 96 84 | 78 49 | 86 65 | 63 01 | 86 65 | 66 26 | 28 03 | 78 49 | 74 80 | 117 74 | 92 76 |
| (ஈ) றனல, அதுருஹிரிய கோட்டை பேருவாக்கள் | 117 05 | 98 73 | 86 52 | 66 16 | 60 16 | 64 24 | 96 70 | 78 37 | 86 52 | 62 91 | 86 52 | 66 16 | 27 99 | 78 37 | 74 66 | 117 56 | 92 62 |
| (உ) முல்லேரியா பேருவா | 116 97 | 98 66 | 86 45 | 66 11 | 60 11 | 64 18 | 96 62 | 78 32 | 86 45 | 62 87 | 86 45 | 66 11 | 27 97 | 78 32 | 74 59 | 117 47 | 92 56 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேல் அப்பொருட்களை விற்றலாகாது.

## அட்டவணை " ஆ "

நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எல்லைகள் | அறக்குளா | கட்டா | அஞ்சீலா | பாரை | கொடுவா | சூரை | தொண்டன் | கும்பளா | பொம்பிலி | நெத்தலி | ஓடற்ற இறுல் கருவாடு | ஓடுள்ள இறுல் கருவாடு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. கொழும்பு முதலியார் பகுதி (மாநகர எல்லைகள் தவிர்ந்த கொழும்புப் பட்டணம்) | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| 2. அளுத்குறு கோறளை தெற்கு | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| 3. சல்பிற்றிக் கோறளை :— | | | | | | | | | | | | |
| (அ) மொரட்டுவ, கெஸ்வலா, மாம்பே பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (ஆ) மற்றேகொடபேருவா | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (இ) ககற்றுடுவா | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| 4. சியானே கோறளை கிழக்கு | 1 26 | 0 90 | 0 72 | 1 03 | 0 87 | 0 97 | 0 72 | 0 31 | 0 92 | 0 88 | 1 13 | 0 87 |
| 5. ஹப்பிற்றிகம் கோறளை | 1 26 | 0 90 | 0 72 | 1 03 | 0 87 | 0 97 | 0 72 | 0 31 | 0 92 | 0 88 | 1 13 | 0 87 |
| 6. அளுத்குறு கோறளை வடக்கு | 1 26 | 0 90 | 0 72 | 1 03 | 0 87 | 0 97 | 0 72 | 0 31 | 0 92 | 0 88 | 1 13 | 0 87 |
| 7. சியானே கோறளை மேற்கு :— | | | | | | | | | | | | |
| (அ) மகர, டலுகம, களனியா பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (ஆ) பியகம, அலுத்கம, பகலுவா பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (இ) நரன்வெல, உருவெல, ஓயாபொட பெம்முல்ல கல்கமுவா பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| 8. ஹேவாகம் கோறளை :— | | | | | | | | | | | | |
| (அ) கொஸ்கம, வஹ, கலுவக்கல பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (ஆ) பாதுக்கை பேருவா | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (இ) ஹன்வெல பேருவா | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (ஈ) றனல, அதுருஹிரிய, கோட்டை பேருவாக்கள் | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |
| (உ) முல்லேரியா பேருவா | 1 25 | 0 89 | 0 71 | 1 02 | 0 87 | 0 97 | 0 71 | 0 30 | 0 91 | 0 87 | 1 12 | 0 86 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேல் அப்பொருட்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.